

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற, கேலக்ஸி தனியார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரமேஷ் பிரபா தாயார் சீத்தாலெட்சுமி அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் அவருடைய வாழ்க்கை வரலாறு புத்தகம் வெளியீட்டு விழா நிகழ்ச்சி, பெரம்பலூர் பூமணம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் பட்டி மன்ற பேச்சாளர் சத்தியசீலன், இலங்கை வானொலி வாசிப்பாளர் அப்துல் ஹமீது, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மக்களின் நல்வாழ்வை பாதுகாக்க ”நலம் காக்கும் ஸ்டாலின் எனும் நல்லதொரு திட்டத்தை முதல்வர் தளபதியார் தொடங்கி வைத்த நிலையில் நீலகிரி மாவட்டம் உதகை நகராட்சிக்குட்பட்ட பெத்தலகேம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புமருந்துத்துறை சார்பில் நடைபெற்ற மாவட்டத்தின் 3வது ‘நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாமில், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா. ராமச்சந்திரன் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பரிசோதனைகளை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வில் இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) சோமசுந்தரம்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், உதகை நகர மன்ற தலைவர் திருமதி.வாணிஸ்வரி, நகர மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமெரிக்க அரசின் 50% வரிவிதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்”!

### திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்பீர்! மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!

திருப்பூர், செப். 1 -

அமெரிக்க அரசின் 50% வரி விதிப்பால் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ள திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைக் கண்டுகொள்ளாமல் கைவிட்ட ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எதிராகவும், திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் “மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி” சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” 02092025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா தலைமையில் திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வரவேற்புரையில், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்று இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டும் என்று திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இந்திய பொருட்கள் இறக்குமதி மீது அமெரிக்கா விதித்துள்ள 50% வரி விதிப்பால் கடும் நெருக்கடியையும், பெரும் பாதிப்பினையும் சந்தித்துள்ளது பின்னலாடை தொழிலின் மையமான திருப்பூர், கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதோடு லட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பணமதிப்பிழப்பு, முறையற்ற GST, கொரோனா பேரிடர் என்ற அடுத்தடுத்த தொடர் தாக்குதல்களால் நசிந்து போயிருந்த திருப்பூர் பின்னலாடை தொழிலானது தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் புத்துயிர் பெற்று மீண்டும் பழைய நிலையை எட்டிப்பிடித்து ஆண்டுக்கு 45,000 கோடிக்கும் அதிகமான ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற தொடங்கியது. ஆனால் அதன் மீது விழுந்த பேரிடியாக அமெரிக்காவின் 50% வரிவிதிப்பு வந்து விழுந்தது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கைகளில் ஏற்பட்ட மோசமான தோல்வியையே இந்த விளைவுகள் காட்டுகின்றன.

திருப்பூர் பின்னலாடை நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கங்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து, கடந்த 16ஆம் தேதியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதி இருந்தார். அதில் தமிழ்நாட்டின் ஜவுளித் துறை கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது என்பதை குறிப்பிட்டு, அமெரிக்க வரி விதிப்பின் காரணமாக, 30 இலட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டி இருந்தார்.

அமெரிக்க வரி விதிப்பால் ஏற்படப்போகும் பாதிப்புகளை முன்கூட்டியே தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என எடுத்துரைத்தும் எந்த நிவாரண நடவடிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்கவில்லை. மீண்டும் ஒரு முறை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் 28.08.25 அன்று வலியுறுத்தியும் கிணற்றில் போட்ட கல் போல அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆபத்து வர போகிறது என்று எச்சரித்தும் அதை எதிர்கொள்ள எந்த நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை ஆபத்து வந்த பின்னும் அதை பற்றி துளியும் கவலையின்றி அமைதியாய் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. பெரும் முதலாளிகளான அதானி, அம்பானிக்கு ஒரு பிரச்சனை என்றால் ஓடோடி வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, உள்நாட்டில் உள்ள சிறு வணிகர்களின் நலனை கவனத்தில் கொள்வதில்லை. குறிப்பாக தமிழ்நாட்டின் திருப்பூர் உள்ளிட்ட தொழில் நகரங்களைத் தொடர்ந்து புறக்கணிப்பது ஏன்? பாதிப்புகளை சரி செய்ய முன்வராமல் மௌனம் சாதிப்பது பின்னலாடை ஏற்றுமதியின் மையமான திருப்பூரை முடக்கும் அமெரிக்காவின் சூழ்ச்சிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசும் துணை போகிறதோ? என்ற சந்தேகத்தை உண்டாக்குகிறது. அமெரிக்கா ஒருபுறம் வரி போட்டு நம்மை முடக்க நினைத்தால் மறுபுறம் வரி நிவாரணம் ஏதும் கொடுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசும் நம்மை முடக்கி வருகிறது.

அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல், திருப்பூர் பின்னலாடை தொழில் நிறுவனங்களைப் பாதுகாக்கும் வகையில் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுக்க வேண்டும். இதனால் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு வரி சலுகை உள்ளிட்ட நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

அமெரிக்க வரி விதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்கள் மட்டும் தொழிலாளர்களின் குரலாய் இருந்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி என்றும் போராடும். திருப்பூரைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் உடனடி நிவாரண நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொள்ள வலியுறுத்தியும் ‘மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி’ சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” வருகிற 02092025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருப்பூர் இரயில் நிலையம் அருகில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழகத்தின் செயல் வீரர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தோழர்கள் கலந்து கொண்டு இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நகராட்சி நிருவாகம் – குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம்

# பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகள்!

### அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 1-

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்தார்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (30.08.2025) செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் உள்ள தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்புகளை தொடங்கி வைத்தார்.

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு பேசியதாவது:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், செயல்படுகின்ற அலுவலகங்களில் 401 -உதவிப்பொறியாளர்கள், 124 -உதவிப்பொறியாளர்கள்(திட்டமிடல்), 15 -இளநிலைப் பொறியாளர்கள், 189- இளநிலைப் பொறி யாளர்கள் (திட்டமிடல்), 207 தொழில்நுட்ப உதவியாளர்கள், 126-படவரைவாளர்கள், 167- பணி மேற்பார்வையாளர்கள், 354 -பணி ஆய்வர் மற்றும் 431 -துப்புரவு ஆய்வர்கள் என மொத்தம் 2014 பணியாளர்கள் இது வரை பணியில் சேர்ந்துள்ளனர்.

நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு அடிப்படை பயிற்சிவகுப்புகள்30.08.2025 முதல் 30.09.2025 வரை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியானது சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் காணொலி காட்சி வாயிலாக தொடங்கிவைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் நகர்புறங்களில் பொதுமக்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பல்வேறு தொழில் நிறுவனங்கள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு அருகில் உள்ள பகுதிகள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அருகில் செயல்பட தொடங்கியுள்ளன. இதனால் குடிநீர், சாலைகள் வசதி, மழைநீர் வடிகால்கள், மின்வசதி போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மற்ற துறைகள் போல் இல்லாமல் நகராட்சி நிருவாகத்துறை என்பது மக்களுடன் நேரடி தொடர்பில் இருக்கும் ஒரு முக்கிய துறையாகும். நகர்ப்புற பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் அடிப்படை வசதிகள் சிறப்பாக சென்றடையும் வகையில் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும். அடிப்படை கல்வி தகுதிகளில் பல சாதனைகளை புரிந்து இருந்தாலும், நடைமுறையில் பணிகளை மேற்கொள்வதற்கு முறையான பயிற்சிகள் வழங்கினால் மட்டுமே அலுவலர்களின் செயல்பாடுகள் பொது மக்களின் பாராட்டுகளை பெறமுடியும். மேலும், பொதுமக்களோடு நேரடி தொடர்பு கொள்வதன் மூலம் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொது மக்களின் தேவைகளை உடனடியாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும். இதனை கருத்தில் கொண்டு அனைத்து நிலை பணியாளர்களும் தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அலுவல் ரீதியான கோப்புகளை எப்படி கையாளுவது, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தினசரி மேற்கொள்ளப்படும் அன்றாட பணிகளோடு பொதுமக்களின் தேவைகளை உடனுக்குடன் சரிசெய்வதற்கான வழிவகைகளை மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும். எனவே ஒரு மாதம் காலம் நடைபெறும் பயிற்சியினை பணியாளர்கள் அனைவரும் முறையாக பயிற்சி பெற்று சிறப்பாக பணியாற்றிட வேண்டும். தங்களுக்கு வழங்கப்படும் பொறுப்புகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிருவாக இயக்குநர் கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. தி.சினேகா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி நயினார்விலை மேற்குப் பகுதியில்

# கழக முன்னோடி சவுந்தரபாண்டியன் 95வது பிறந்த நாள்!

### அமைச்சர் கீதா ஜீவன் நேரில் வாழ்த்து!

நெல்லை செப். 1 -

முன்னாள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றிய கழக முன்னோடி சவுந்தர பாண்டியன் அவர்களின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி நயினார்விலை மேற்கு பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. கீதாஜீவன் சென்று வாழ்த்து தெரிவித்து கௌரவித்தார்.

சௌந்தரபாண்டியன் அவர்கள் தி.மு.க. தணிக்கை குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். மேலும் தூத்துக்குடி மேலூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும், பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

அந்நிகழ்வின் போது மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், வட்டச் செயலாளர் ரவி இளங்கோ, மாமன்ற உறுப்பினர் மரிய கீதா, வட்ட பிரதிநிதிகள் ஏகாம்பரம், இளங்கோ, வட்ட துணைச் செயலாளர்கள் சுந்தர், ராமலட்சுமி, முன்னாள் வட்டச் செயலாளர் கோயில் ராஜ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலாஜி, மாநகர மாணவரணி அமைப்பாளர் டைகர் வினோத், திரேஸ்புரம் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெர்சன், பகுதி விவசாய அணி துணை அமைப்பாளர் நடராஜன், பகுதி கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சிற்றரசு, வட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஸ்டின் ஆகியோர் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட புதுக்குளம் திருவள்ளுவர் சிலை அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிய பயணிகள் நிழல் குடை அமைப்பதற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகர மேயர் செ திலகவதி செந்தில் மாநகர துணை மேயர் எம்.லியாகத் அலி, தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் மாவட்ட துணைச் செயலாளர் பெ.ராஜேஸ்வரி பொதுக்குழு உறுப்பினர் இராசு.சந்தோஷ் மாநகர அவைத் தலைவர் ரெத்தினம் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், மாநகர மாவட்ட கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியம் பாக நிலை முகவர்கள் (BLA2), பாக நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்பில் நெப்புகை முனியாண்டவர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் தஞ்சாவூர் மத்திய மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளருமான மு.மணவழகன் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற பாக நிலை முகவர்கள் (BLA2) பாக நிலை குழு உறுப்பினர்கள் (BLC) ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார். நிகழ்வில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, அரசு வழக்கறிஞர்கள் பூங்குடி சிவா, ராமையா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ராஜா, ஜானகிராமன், ஒன்றிய கழக நிர்வாகிகள் க.சுப்பிரமணியன், வி.எம்.ரவிச்சந்திரன், கருப்பையா, எஸ்.கோவிந்தன், நியூஸ் ராஜேந்திரன், சு.குஞ்சப்பா, க.ராஜேந்திரன், எஸ்.ஆர். கலையரசன் உள்ளிட்ட பாக நிலை முகவர்கள், பாக நிலை குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.